## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.78/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : திருமதி. மீனா |
| Father/Husband's Name | : செந்தில்குமார் |
| Village | : நெ.28, நேரு தெரு, |
| Taluk | : கரும்பாக்கம், பாலூர் அஞ்சல் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.06.2025.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது கரும்பாக்கத்தில் வசித்து ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 19.10.2021 அன்று இரவு 09.00 மணியளவில் எனது கணவரின் தம்பியான இரவிக்குமார் என்பவர் கத்தியுடன் வந்து எனது கணவர் செந்தில்குமாரின் வலது பக்க புருவத்தில் கத்தியால் வெட்டிவிட்டார். பின்னர் அவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக இரவு 10.30 மணியளவில் அனுமதித்தோம். பாலூர் போலிசார் அன்றைய தினமே மருத்துவமனையில் வந்து பார்த்தார்கள். மறுநாள் காலை நான் பாலூர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். சம்பவம் நடக்கும் போது நான் சம்பவயிடத்தில் இருந்தேன். வீட்டு பிரச்சனைக்காக நானும், எனது கணவரும் சாப்பிட்டு கொண்டிருக்கும் போது இரவிக்குமார் அசிங்கமாக தெவிடியா முண்ட நான் வீட்டை காலி பண்ண முடியாது இங்க தான் இருப்பேன் என்று பேசினார். ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்ட போது வெட்டிவிட்டார். எங்களை வீட்டின் வாசலில் நின்று கொண்டு வெட்டிவிட்டார்.

போலிசாரிடன் நான் திட்டிய விபரத்தை பதட்டத்தில் சொல்லவில்லை. சாட்சியிடம் இவ்வழக்கு சொத்து காண்பிக்கப்பட்டது. அந்த வழக்கு சொத்தை பயன்படுத்தி தான் இரவிக்குமார் கழுத்தில் வெட்ட வந்தார் எனது கணவர் திரும்பியதால் புருவத்தில் வெட்டி விட்டார். **அந்த வழக்கு சொத்து சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சியிடம் இவ்வழக்கு புகார் காண்பிக்கப்பட்டது. அந்த புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தானென்றும், அந்த புகார் தான் கொடுத்தது தான் என்றும் கூறுகிறார். **அந்த புகார் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகாரில் அசிங்கமாக பேசிய விவரங்களை நான் குறிப்பிடவில்லை.

எனது கணவரின் வலது புருவத்தில் இரண்டு தையல் போட்டார்கள். ஒரு வாரம் மருத்துவமனையில் இருந்தார். ஆஜர் எதிரி தான் இரவிக்குமார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

ஆஜர் எதிரியும் எனது கணவரும் என்ன உறவுமுறை என்றால் அண்ணன், தம்பி. ஆஜர் எதிரியை தவிர்த்து உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று கேட்டால் இரண்டு பேர். எனது கணவருக்கும், ஆஜர் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் வீட்டுமனை பிரச்சனை. அந்த வீட்டுமனை யார் பெயரில் உள்ளது என்றால் எனது கணவரின் அப்பா பெயரில் உள்ளது. அப்பாவின் சொத்து எதிரிக்கு பங்குள்ளது என்ற போது எதற்காக அவருடன் பிரச்சனை ஏற்பட்டது என்று கேட்டால் எனக்கு சொந்தமான பாத்திரங்களை தார்பாய் போட்டு மூடிவிட்டு நான் செங்கல்பட்டுக்கு வரும் போது அவர்கள் அந்த வீட்டில் குடும்பம் நடத்தி கொண்டிருந்தார்கள். அது தவறு தானே அதனால் தான் பிரச்சனை.

எதிரி அந்த வீட்டில் குடியிருந்த சமயத்தில் நான் எங்கு வசித்து வந்தேன் என்று கேட்டால் செங்கல்பட்டு நத்தம் என்ற பகுதியில் வாடகைக்கு குடியிருந்து வந்தேன். சம்பவம் நடந்தது எந்த வீட்டில் என்று கேட்டால் கரும்பாக்கம் வீட்டில். நான் எதற்காக கரும்பாக்கம் சென்றேன் என்று கேட்டால் எனது வீடு கரும்பாக்கத்தில் தான் உள்ளது எனது பிள்ளைகளின் படிப்பிற்காக செங்கல்பட்டில் இருந்தேன். அந்த வீட்டில் இரண்டு மாதம் இருந்து கொள்வதாக எதிரி கூறினார். நான் சம்பவத்தன்று சென்று வீட்டை காலி செய்யுமாறு கேட்ட போது தான் பிரச்சனை செய்துள்ளார். இந்த வழக்கு புகார் இல்லாமல் எதிரி மீது வேறு புகார் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இரு வேறு புகார்கள் கொடுத்துள்ளேன்.

ஆஜர் எதிரியோ அல்லது அவரது மனைவியோ என் மீது புகார் அளித்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லையென்றாலும், எனது கணவருக்கு வேறு எங்கோ ஏற்பட்ட காயத்தினை வைதது எதிரி மீது பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 78/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : திரு. செந்தில்குமார் |
| Father/Husband's Name | : சேகர் |
| Village | : நெ.16, மேட்டு தெரு |
| Taluk | : கரும்பாக்கம், பாலூர் அஞ்சல் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.06.2025.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது கரும்பாக்கத்தில் வசித்து டிரைவராக பணிபுரிகிறேன். கடந்த 19.10.2021 அன்று இரவு 09.00 மணியளவில் எனது தம்பி இரவிக்குமாருடன் வாய் தகராறு மற்றும் வாக்குவாதம் நடந்த போது அவர் கத்தி எடுத்து வெட்ட வந்த போது நான் திரும்பினேன் எனது புருவத்தில் வெட்டுபட்டது. பின்னர் நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தேன். போலிசார் மருத்துவமனையில் வந்து விசாரணை செய்தார்கள். இரண்டு நாட்கள் மருத்துவமனையில் இருந்துவிட்டு பின்னிட்டு சென்றுவிட்டேன். சாட்சி வலது பக்க புருவத்தில் காயம் ஏற்பட்டதாக காண்பிக்கிறார். கரும்பாக்கத்தில் உள்ள வீட்டில் மேட்டு தெருவில் வைத்து என்னை எனது தம்பி வெட்டினார். சம்பவத்தை குறித்து எனது மனைவி புகார் அளித்தார். சாட்சியிடம் வழக்கு சொத்து காண்பிக்கப்பட்டது அதை பயன்படுத்தி தான் தன்னை வெட்டியதாக கூறுகிறார். ஆஜர் எதிரி தான் எனது தம்பி. இந்த சம்பவத்தை 10 நபர்களுக்கு மேல் பார்த்தார்கள். இரண்டு நபர்களை நான் சாட்சியாக போலிசாரிடம்

ஒப்படைத்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

ஆஜர் எதிரிக்கும் எனக்கும் என்ன பிரச்சனை என்றால் நிலம் பிரச்சனை. நிலப்பிரச்சனை சம்மந்தமாக இவ்வழக்கு சம்பவத்தன்று வேறு யாருடனாவது பிரச்சனை செய்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடக்கும் போது கரும்பாக்கத்தில் உள்ள மெத்தை வீட்டில் இருந்தோம். எதிரி ஓட்டு வீட்டில் இருந்தார். என்னுடன், எனது அப்பா, எனது மனைவி, பிள்ளைகள் இருந்தார்கள். சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்றால் ஓட்டு வீடு பக்கத்தில் உள்ள தெருவில் நடந்தது. ஏற்கனவே எனக்கும், எனது தம்பிக்கும் சொத்து பிரச்சனை காரணமாக முன் விரோதம் இருந்ததால் காவல் நிலையத்தில் பொய்யான புகார் அளித்து ஏற்கனவே ஏற்பட்ட காயத்திற்கு பொய்யான சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சம்பவத்தன்று ஆஜர் எதிரி வீட்டில் இல்லாத போது அவரது மனைவியிடம் தகராறு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று நான் எனது அப்பாவிடம் சண்டை போட்டேன் என்றால் இல்லை இரண்டு நாட்கள் முன்பு தான் போட்டேன்.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.